




## திராவிட மாடல் அரசு

89

**பன்னீர் பெருமாள்**

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

# மதுரை ஸ்டார்ட் அப் திருவிழா!

## தொடரும் தொழில் கனவு



- அரங்கு அமைத்த நிறுவனங்கள்-140
- உணவுத் தயாரிப்பு ஸ்டார்ட்அப்கள்-100
- ஆலோசனை அளித்த வல்லுநர்கள்-80
- தயாரிப்பு அறிமுகங்கள்-103
- பார்வையாளர்கள்-20 ஆயிரம்
- அரசு வழங்கிய ஆதார நிதி-ரூ.16.39 கோடி
- பயன்பெற்ற புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள்-16

இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உரு வெடுத்துள்ளது. உற்பத்தி, சேவைத்துறை தொழில்கள் மட்டுமல்லாமல், **'புதுயுகத் தொழில்கள்'** எனப்படும், **'ஸ்டார்ட் அப்'** வளர்ச்சியிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. திராவிட மாடல் அரசு அமைந்ததில் இருந்தே, புத்தாக்கத் தொழில்களை ஊக்குவிக்கப் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அதில் ஒன்றுதான் ஸ்டார்ட் அப் டி என். 'STARTUPTN' திட்டம்.

2021-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஸ்டார்ட் அப் தமிழ்நாடு திட்டம், 2022 - ஆம் ஆண்டிலிருந்து முழுவேகமாக முழுமையாகச் செயல்படத் தொடங்கியது. குறிப்பாக, 'ஸ்டார்ட் அப்' எனப்படும் புத்தாக்கத் தொழில்கள் சென்னையை மட்டும் மையமாகக் கொண்டிருக்கக்கூடாது, தமிழ்நாடு முழுவதும் இந்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று நினைத்தது நம் அரசு. அதற்காக, வட்டாரப் புத்தொழில் மையங்கள் மதுரை, திருநெல்வேலி, கோவை, திருச்சி, ஓசூர், சேலம், தஞ்சாவூர் உள்ளிட்ட பத்து இடங்களில் உருவாக்கப்பட்டன.

இந்த முயற்சிகளின் விளைவாக, 2021-ஆம் ஆண்டு 2 ஆயிரம் எண்ணிக்கையில் இருந்த புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள், இப்போது 9 ஆயிரத்து 200 ஆக வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் ஸ்டார்ட் அப் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. தவிர, 2028-ஆம் ஆண்டுக்குள் 15 ஆயிரம் புத்தாக்கத் தொழில் நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என, இலக்கு வைத்துச் செயல்படுகிறது திராவிட மாடல் அரசு.

### விழிப்புணர்வுப் பணிகள்

புதுயுகத் தொழில் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது, தொழில்முனைவோருக்கான ஒருங்கிணைவை ஏற்படுத்துவது, புத்தாக்கத் தொழில் உருவாவதற்கான சூழலை உருவாக்கு வது ஆகியவற்றுக்காக புத்தாக்கத் தொழில் திருவிழாக்களை நடத்தவும் **'ஸ்டார்ட் அப் தமிழ்நாடு'** திட்டம் முடிவு செய்தது. கடந்த ஆண்டு கோவையில் நடைபெற்றதுபோல, இந்த ஆண்டு மதுரையில் களை கட்டியது.

தென் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் இல்லாமல், இருந்ததைக் கண்டறிந்து, அந்த மாவட்டங்களில் புதுயுகத் தொழில் வளர்ச்சி குறித்த விழிப்புணர்வை உருவாக்கவும், ஊக்குவிக்கவும் செப்டம்பர் மாதம் 28 மற்றும் 29 ஆகிய



தேதிகளில் மதுரையில் ஸ்டார்ட் அப் டி என். (STARTUPTN) திருவிழா நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்தத் திருவிழாவில், மூன்று வகைகளில் அரங்குகள் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் வகைமையில், புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. 140 நிறுவனங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரங்குகளில் தங்கள் நிறுவனம் தொடர்பானவற்றை காட்சிப்படுத்தி இருந்தனர்.

தென் மாவட்டங்களில் பாரம்பரியமான பல உணவுகள் இருக்கின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு, புதிய உணவுத் தொழில்கள் உருவாகி வருவதையும் கணக்கில் எடுத்த தமிழ்நாடு புத்தாக்கத் தொழில் நிறுவனம், அது தொடர்பான நிறுவனங்களுக்கு

**தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருக்கும் நவீன தொழில்முனைவோரை உலக அளவில் கொண்டு செல்வதற்கான முனைப்புகளையும் கொண்டுள்ளது. அதற்கான சான்றுதான் மதுரை ஸ்டார்ட்அப் திருவிழா.**

தனியாக ஃபுட் ஸ்டார்ட் அப் காரிடார் (Food Startups Corridor)-ஐ அமைத்திருந்தது. இதில், 100 நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி இருந்தனர்.

### கலந்துரையாடல்

அது மட்டுமில்லாமல், தொழில்முனைவோர் கலந்துரையாடல், ஆலோசனை மற்றும் கூட்டுத்தொழில் வாய்ப்புகளுக்கான ஆலோசனை எனப் பல வழிகளில் புத்தாக்கத் தொழில் முனைவோருக்கான தொழில் விரிவாக்க வாய்ப்புகளை இந்தத் திருவிழா உருவாக்கியது.

கலந்துரையாடலில் தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், ஆலோசகர்கள் என 80 பேர் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். முதலீட்டாளர்களுக்கும் புத்தாக்கத் தொழில் நிறுவனங்களுக்கும் சந்திப்பை ஏற்படுத்தி, தொழில் முனைவோர் தங்கள் திட்டங்களை முனைவைத்து, முதலீடுகளை ஈர்க்க வாய்ப்பை ஏற்படுத்தியது. இதில் 60 நிறுவனங்கள் முதலீட்டாளர்களுடன் சந்தித்து உரையாடினார்,

புத்தாக்கத் தொழில் பொருட்கள் அறிமுகம் என்கிற அரங்கத்தில், நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள்



குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அந்தப் பிரிவில் 103 நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கினர். மொத்தமாக, இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மதுரை ஸ்டார்ட் அப் திருவிழாவில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டு கண்காட்சியைக் கண்டு களித்து புத்தாக்கத் தொழில் குறித்து தெரிந்து கொண்டனர்.

### முதலீட்டு ஆணைகள்

நிதித் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம், பசுமைத் தொழில்நுட்பம், கல்வித் தொழில்நுட்பம், உணவு மற்றும் வேளாண்மைத் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் கண்காட்சி அரங்குகளில் இடம் பெற்றிருந்தன.

இந்த புத்தாக்கத் தொழில் திருவிழாவின் இறுதியில், தொடக்க நிலை ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் 'ஆதார நிதி முதலீட்டுத் திட்டமான' தமிழ்நாடு புத்தாக்கத் தொழில் ஆதார நிதியின் (டான்சீட்) மூலம் 37 புத்தாக்கத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4.84 கோடிக்கான அனுமதி ஆணைகள் அளிக்கப்பட்டன.

பட்டியலின மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர்களால் நடத்தப்படும், ஸ்டார்ட்அப்களில் முதலீடு செய்யும் வகையில், 8 தொழில்முனைவோருக்கு ரூ.11.55 கோடிக்கான முதலீட்டு ஆணைகள் இந்தத் திருவிழாவில் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு முதலீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து வேலை வாய்ப்பை உருவாக்கும் திராவிட மாடல் அரசு, மறுபுறம் தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருக்கும் நவீன தொழில் முனைவோரை உலக அளவில் கொண்டு செல்வதற்கான முனைப்புகளையும் கொண்டு உள்ளது. அதற்கான சான்றுதான் மதுரை ஸ்டார்ட்அப் திருவிழா.

**...சாதனை தொடரும்**

## வரலாற்றுத் திரிபு வேலை!

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் கால அடையாளங்கள், மொகலாயர் ஆட்சிக் கால அடையாளங்களைச் சிதைக்க வேண்டும் என்பதை, இலக்காக வைத்திருக்கும் ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க., பரிவாரங்கள், சுதந்திர இந்தியாவின் வரலாற்றைச் சிதைப்பதையும் வேலையாகக் கொண்டுள்ளனர். எழுத்தாளர் சரவணக் கார்த்திகேயன் தனது அனுபவத்தை இவ்வாறு பதிவிட்டுள்ளார்.


"தில்லியில் 'தீன் மூர்த்தி பவன்' இருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் கட்டியது. நேரு பிரதமராக இருந்த காலம் முழுக்க வாழ்ந்த வீடு. நான் சென்ற முறை தில்லி சென்ற போது – ஏழெட்டு ஆண்டுகள் இருக்கும்–இது நேருவுக்கான பிரத்யேக அருங்காட்சியமாக இருந்தது (Nehru Memorial Museum & Library). மொத்தமிருக்கும் இரண்டு தளங்கள் முழுக்கவும் நேருவின் வரலாறு, அவர் பயன்படுத்திய அறைகள், அவர் பயன்படுத்திய பொருட்கள், அவருக்கு பல்வேறு நாடுகளில் இருந்து வந்த பரிசுப் பொருட்கள் என நிறைந்திருந்தன.

ஆனால், இப்போது அந்த வளாகத்தைப் பெயர் மாற்றி விட்டார்கள் – Pradhanmantri Sangrahalaya. அதாவது இந்தியப் பிரதமர்கள் அனைவருக்குமான அருங்காட்சியகம். அந்த வளாகத்திலேயே புதிதாக இதற்கென ஒரு கட்டடம் எழுப்பி இருக்கிறார்கள் – அது பரவாயில்லை. ஆனால், தீன் மூர்த்தி பவன் பிரதானக் கட்டடத்திலும் தரைத்தளத்தை நேருவுக்காக என்றில்லாமல், பொதுவாக சுதந்திரப் போராட்டம், அரசியல் சாசனம் என்றாக்கி விட்டார்கள். முதல் தளத்தில் பாதி மட்டும் நேருவுக்கு. மீதி வாஜ்பாய், மோடி எனப் பிற பிரதமர்களுக்கு – அவர்களுக்கு வந்த சர்வதேசப் பரிசுப் பொருட்கள் நேருவுக்கு இணையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

தீன்மூர்த்தி பவன் என்பது நேருவுக்கான அடையாளம் என்றில்லாமல், இந்தியாவின் எல்லாப் பிரதமர்களுக்குமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், நேருவுக்கு என்று எந்தத் தனித்துவமும் இல்லை, அவர் பத்தோடு ஒன்று பதினொன்றாக இருந்த பிரதமர் என்று மறைமுகமாக மக்களுக்கு உணர்த்துகிறார்கள். சங்கிகள் தொடர்ந்து செய்து வரும் வரலாற்று அழிப்பு/திரிபு வேலைகளில் இதுவும் ஒன்று!"எனப் பதிவிட்டுள்ளார்.

அழிப்பதை மட்டுமே வரலாறாகக் கொண்டவர்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் வந்தால், இதுதான் நடக்கும்.

## :ப்ளாஷ்பேக்



### குழந்தைகளை வாழ்த்திய தளபதி!



மு.நாகன்

1990-ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிக்கு, கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள். அப்போது அன்றைக்கு நகரச் செயலாளராக இருந்த நான், தலைவர் அவர்களை என் குடும்பத்தாருடன் சந்தித்து, வீட்டிற்கு வரவேண்டுமென என் விருப்பத்தைத் தெரிவித்தேன். கழக நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு, திருத்தணி ஜோதி நகரில் அமைந்துள்ள, என் இல்லம் வந்து குழந்தைகளை வாழ்த்தினார்.

**– மு.நாகன், முன்னாள் நகரச் செயலாளர், திருத்தணி நகரம், திருவள்ளூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அண்ணாவை அழைத்த களம்!

1937-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கட்டாய இந்தித் திணிப்பை, அன்றைய சென்னை, மாகாண முதலமைச்சராக இருந்த இராஜாஜி நடைமுறைப்படுத்த முனைப்பு காட்டினார். அதுதான் பேரறிஞர் அண்ணாவை, அரசியல்களத்தில் முழு வீச்சாக ஈடுபட வைத்தது. காஞ்சியில் 'சுயமரியாதை இயக்கம்' சார்பில் கூட்டப்பட்ட மாநாட்டுக்கு அண்ணா தலைமை ஏற்றார். போராட்டத்தில் ,தன்னையும் இணைத்துக் கொண்டது நீதிக்கட்சி. இப்போராட்டத்தில், பெரியார், அண்ணா உட்பட 1,200 பேர் கைது செய்யப்பட்டனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

622

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.